பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

10 04 2024 12 40

புதன்கிழமை நண்பகல்

தலைப்புச் செய்திகள்-

1. கச்சத்தீவை இலங்கைக்கு தாரைவார்த்து காங்கிரஸ், திமுக கட்சிகள் தமிழகத்திற்கு துரோகம் விளைவித்துள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

2. தமிழை இந்தியாவின் அலுவல் மொழியாக்குவது, மத்திய அமலாக்கத்துறை, சிபிஐ, ஆகியவை சுதந்திரமாக செயல்படுவது உள்ளிட்ட வாக்குறுதிகளை பிரதமர் அளிக்க வேண்டுமென்று திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

3. இளம் வாக்காளர்கள் கை-விரலில் மை-யுடன் தேர்வு எழுதும் அறைக்குள் நுழைய முடியாது என்று சமூக வலைதளத்தில் பரவி வரும் தகவல்கள் முற்றிலும் தவறானது என்று தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

4. ஹோமியோபதி மருத்துவமுறை உலகம் முழுவதும் 80 நாடுகளில் பின்பற்றப்படுவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் ராஜஸ்தான் – குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

--- *இனி விரிவான செய்திகள்* ---

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் முதல் மற்றும் இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

முதல்கட்ட வாக்குப்பதிவுக்கு இன்னும் எட்டு நாட்களே உள்ள நிலையில் அரசியல் கட்சித் தலைவர்கள் முழுவீச்சில் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது வேட்பாளர்களும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

**[]<<<>>>[]**

காங்கிரஸ், திமுக ஆட்சியில்தான் கச்சத்தீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டது என்றும், இந்த இரு கட்சிகளும் தமிழகத்திற்கு துரோகம் விளைவித்துள்ளதகாவும் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

தமிழகத்தின் வேலூரில் இன்று தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், திமுக அரசின் செயல்பாடுகள் காரணமாக தமிழகம் வளர்ச்சியில் பின்னோக்கி சென்றுக் கொண்டிருப்பதாகக் குற்றம்சாட்டினார்

தமிழக இளைஞர்கள் இந்திய பொருளாதாரத்தை வலுப்படுத்தி வருவதாகவும், திமுக-வின் நடவடிக்கைகள் காரணமாக இளைஞர்களுக்கான வாய்ப்புகள் மறுக்கப்படுவதாக அவர் கூறினார்.

இந்தியாவை வல்லரசாக மாற்றுவதில் தமிழகத்தின் பங்கு முக்கியமானது என்றும், வளர்ச்சியடைந்த இந்தியாவின் தலைமையை தமிழகம் ஏற்க வேண்டிய நேரம் இது என்றும் அவர் தெரிவித்தார்.

திமுக ஆட்சியில் ஊழல், போதைப்பொருள் விற்பனை அதிகரித்துள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

தமிழகத்தில் நலத்திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசு ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை வழங்கியுள்ளதாகவும், திமுக அரசு அதனை முறையாக பயன்படுத்தவில்லை என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

நாடு முழுவதும் தமிழின் பெருமை அறியப்பட வேண்டும் என்பதே தமது விருப்பம் என்றும் அவர்குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் தமிழகத்தின் செங்கோல் நிறுவப்பட்டபோது திமுக அந்த நிகழ்வில் பங்கேற்கவில்லை என்று அவர் குற்றம்சாட்டினார்.

தமிழகத்தின் எதிர்கால வளர்ச்சியை கருத்தில் கொண்டு இந்த தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு அளிக்கும்படி பிரதமர் கேட்டுக் கொண்டார்.

திரு நரேந்திரமோடி இன்று பிற்பகல் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் நடைபெறும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பங்கேற்கிறார்.

தமிழகத்தில் பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு மகாராஷ்டிரா செல்லும் பிரதமர், இன்று மாலை நாக்பூர் பிரச்சார கூட்டத்தில் பங்கேற்கிறார்.

**[]<<<>>>[]**

தமிழை இந்தியாவின் அலுவல் மொழியாக கொண்டு வரும் உத்தரவாதத்தை பிரதமர் திரு நரேந்திமோடி அளிக்க வேண்டுமென்று திமுக தலைவரும், தமிழக முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் தேர்தல் காலத்தில் மட்டும் தமிழகத்திற்கு வருகை தரும் பிரதமர், தாம் சுட்டிக்காட்டும் விஷயங்கள் தொடாபாக உத்தரவாதம் தர முடியுமா என வினவியுள்ளார்.

மத்திய அமலாக்கத்துறை, சிபிஐ, உள்ளிட்ட மத்திய அரசு நிறுவனங்கள் சுதந்திரமாக செயல்பட அனுமதிப்பது, வெள்ள நிவாரணத்துக்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்வது, தேர்தல் பத்திரம் குறித்த வெளிப்படையான விசாரணைக்கு உத்தரவிடுவது, தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலை நிறுத்துவது, படகுகளை மீட்பது, பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலைகளை குறைப்பது, ஆண்டுக்கு இரண்டு கோடி இளைஞர்களுக்கு வேலை அளிப்பது, மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்தின் ஊதியத்தை 400 ரூபாயாக உயர்த்துவது, மாநிலங்களை வஞ்சிக்காத, நியாயமான நிதிப்பகிர்வை தருவது, நீட் தேர்விலிருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிப்பது போன்றவற்றுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி உத்தரவாதம் அளிப்பாரா என்றும் திரு மு க ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

திருக்குறளை தேசிய நூலாகவும், உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்க சட்டம் இயற்ற முடியுமா என்றும் அவர் வினவியுள்ளார்.

**[]<<<>>>[]**

இளம் வாக்காளர்கள் கை விரலில் மை-யுடன் தேர்வு எழுதும் அறைக்குள் நுழைய முடியாது என்று சமூக வலைதளத்தில் பரவி வரும் தகவல்கள் முற்றிலும் தவறானது என்று தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சமூக வலைதளங்களில் பரவி வரும் தகவல்கள் முற்றிலும் ஆதரமற்றவை என்றும், அவ்வாறு எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை என்றும் அது தெளிவுபடுத்தியுள்ளது.

இதுபோன்ற வதந்திகளை மாணவர்கள் நம்ப வேண்டாம் என்றும், தங்களது வாக்குரிமையை தவறாமல் செலுத்த வேண்டும் என்றும் அது கேட்டுக் கொண்டுள்ளது.

[]<<<>>>[]

அயர்லாந்து நாட்டின் பிரதமராக பொறுப்பேற்றுள்ள திரு சைமன் ஹாரீஸூக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இரு நாடுகளும் ஜனநாயக அடிப்படையிலானது என்றும், இவற்றுக்கு இடையேயான வரலாற்று தொடர்பு மிகவும் மதிப்பு வாய்ந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா – அயர்லாந்து இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

ஹோமியோபதி மருத்துவமுறை உலகம் முழுவதும் 80 நாடுகளில் பின்பற்றப்படுவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

உலக ஹோமியோபதி தினத்தையொட்டி புதுதில்லியில் ஹோமியோபதி ஆராய்ச்சிக்கான மத்திய கவுன்சில் ஏற்பாடு செய்துள்ள இரண்டு நாள் கருத்தரங்கை அவர் இன்று தொடங்கி வைத்து உரையாற்றினார்.

ஹோமியோபதி மருத்துவ ஆய்வுகளை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இந்திய மருத்துவத் துறையில் ஹோமியோபதி முக்கிய பங்கு வகிப்பதாக திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

ஹோமியோபதியில் ஆராய்ச்சியை மேம்படுத்துதல்" என்ற கருப்பொருளில் நடைபெறும் இந்த கருத்தரங்கில் ஆயுஷ் அமைச்சகத்தின் உயர் அதிகாரிகளும், ஸ்பெயின், கொலம்பியா, கனடா, பங்களாதேஷ், நெதர்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றுள்ளனர்.

ஹோமியோபதி மருத்துவத்தின் நிறுவனரான ஜெர்மனியைச் சேர்ந்த சாமுவேல் ஹானிமனின் பிறந்த தினத்தையொட்டி, 2005-ம் ஆண்டு முதல் ஏப்ரல் 10-ம் தேதி இந்த தினம் உலகம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இதையொட்டி ஆயுஷ் அமைச்சகம் நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்துள்ளது.

**[]<<<>>>[]**

தொகுதி வாரியாக எமது செய்தியாளர்கள் வழங்கும் இந்த பகுதியில் இன்று இடம்பெறுகிறது தமிழகத்தில் உள்ள நாகப்பட்டினம் மக்களவைத் தொகுதி

*(வாய்ஸ் பைட் - செல்வன் ஜெபராஜ் - 80 செகண்ட்ஸ்)*

**[]<<<>>>[]**

சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட தொகுதிகளில் வாக்குப்பதிவு எந்திரங்களில் வேட்பாளர்கள் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி இன்று தொடங்கியதாக மாவட்ட தேர்தல் அலுவலகர் திரு ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

*( சவுண்ட்பைட் - ராதாகிருஷ்ணன் ) 33 செகண்ட்*

**[]<<<>>>[]**

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்ட 19 தமிழக மீனவர்கள் இன்று சென்னை விமான நிலையம் வந்தடைந்தனர்.

பின்னர் அவர்கள் மாநில மீன்வளத்துறை ஏற்பாடு செய்திருந்த வாகனம் மூலம் அவர்கள்து சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் ராஜஸ்தான் – குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

ஜெய்ப்பூரில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான மூன்றாவது ஹாக்கிப் போட்டி இன்று நடைபெறுகிறது.

பெர்த்தில் நடைபெறும் இப்போட்டி இந்திய நேரப்படி பிற்பகல் 3 மணிக்கு தொடங்குகிறது.

5 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் முதல் இரண்டு போட்டிகளில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்று முன்னிலையில் உள்ளது.

**[]<<<>>>[]**

சீனாவில் நடைபெற்று வரும் **Bille jean king** கோப்பை டென்னிஸ் போட்டியில் இந்திய மகளிர் அணி மூன்று – பூஜ்ஜியம் என்ற ஆட்டக் கணக்கில் பசிபிக் ஓசினியா அணியை வென்றது.

***End of News***